# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
## முதலாம் தவணை மதிப்பீட்டு பரீட்சை – 2022

| தரம் - 9 | செயன்முறைத் தொழினுட்பத்திறன் | நேரம்: 2 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..................................................................

பகுதி I

**01. பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1) நீர் செயன்முறைத் தொழிநுட்பத்திறன் பாடத்தினை செயற்பாட்டு ரீதியாக, ஆய்வு ரீதியாக அனுபவ வாயிலாக கற்றுக் கொள்வதன் மூலம் உம்மால் விருத்தி செய்யக் கூடியதாக உள்ளது.
1) பிரச்சினைகளை இலகுவாக விடுவித்தல்.
2) அறிவு, மனப்பாங்கு என்பவற்றை வளர்த்தல்.
3) அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை வளர்த்தல்.
4) வேலைகளை இலகுவாக செய்ய முடிவது.

2) பாடசாலையில் செயற்றிட்டமொன்றிற்காக உங்களுக்கு கிடைக்கப்பெறும் மொத்தக் காலம்,
1) 1 - 3 வாரங்கள் 2) 1 -2 வாரங்கள் 3) 1 மாதம் 4) 7 நாட்கள்

3) சிறப்பாக திட்டமிட்டு உருவாக்கப்பட்ட வீட்டுத் தோட்டத்தின் மூலம் நாம் பெற்றுக் கொள்வது,
1) குடும்ப உணவுப் பொருளாதரத்திற்கு சிறந்த பங்களிப்பை வழங்கல்.
2) சமநிலையான போசணை உணவைப் பெற்றுக் கொள்ளல்.
3) பொருளாதார ரீதியாக இலாபமீட்டக் கூடிய வணிக முயற்சியாக மாற்றல்.
4) மேற்கூறிய யாவும்.

4) ஒரே சாடியில் பலவகைப் பயிர்களை நாட்டக் கூடிய பயிர்த் தொகுதி,
1) கறிவேப்பிலை, றம்பை, சேம்பு, புதினா
2) றம்பை, சேம்பு, புதினா, மரவள்ளி
3) கறிவேப்பிலை, றம்பை, மரவள்ளி, கத்திரி
4) கத்தரி, மரவள்ளி, மிளகாய், புதினா

5) பல்லாண்டு தாவரங்களின் கிளைகள், வேர்களை நீண்ட காலமாகக் கத்தரித்து பராமரிப்பதன் மூலம் பெறப்படும் தாவரங்கள்,
1) கோக்கிடாமா 2) பொன்சாய் 3) நுண் பூங்கா 4) மழலையர் பூங்கா

6) உள்ளூர் வெரலிய கறி மிளகாயின் இயல்பு,
1) குறைவான உறைப்பு 2) அதிக உறைப்பு
3) நீண்ட நாட்களுக்கு பயன்படுத்தல் 4) மேற்கூறிய யாவும்

7) இலங்கையில் மீள் காடு வளர்ப்பிற்கு நல்லதொரு உதாரணமாக குறிப்பிடக் கூடியது,
1) பட்ட கமுவ 2) கல் கடுவ 3) முல்லைத்தீவு 4) தமன் கடுவ

8) நாற்றுச் சாடியின் அடியில் துவாரம் இடுவதன் நோக்கம்,
1) அமுக்கத்தைக் குறைக்க 2) வேர் வெளிச் செல்ல
3) மேலதிக நீர் வெளியேற 4) மேலதிக வளி கிடைக்க

10) நீர்த் தேவைப்பாடு மற்றும் நீர்ச் சேதத்தைக் கருத்திற் கொண்டு மிகக் குறைந்த நீர் விரயம் கொண்ட நீர்பாசன முறை,
1) துளி முறை நீர்ப்பாசன முறை. 2) தூவல் முறை நீர்ப்பாசன முறை.
3) பரவல் நீர்ப்பாசனம். 4) பாத்தி நீர்ப்பாசனம்.



kalvi.lk

11) பிறப்புரிமையியல் தொழினுட்பத்தின் மூலம் உருவாக்கப்படும் பயிர்ப்பேதங்களின் மூலம் பெற்றுக் கொண்ட வித்துக்கள்,
1) நைதரசனை அதிகம் கொண்டவை. 2) முளை திறன் அற்றவை.
3) உறங்கு நிலையற்றவை. 4) முளை திறன் அதிகம் கொண்டவை.

12) சர்வதேச தரக் கட்டளைகள் நிறுவனத்தின் குறியீடு,
1) B.S.S 2) SIS 3) I.S.O 4) S.LT

13) வெட்டப்பட்ட அன்னாசித் துண்டுகளை கபில நிறமாவதை தவிர்ப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டியது,
1) எலுமிச்சைச் சாறு கலந்த நீரில் அமிழ்த்தி வைத்தல்.
2) சீனிக் கரைசலில் அமிழ்த்தல்.
3) நன்கு இறுக்கமான கண்ணாடி போத்தலில் இடுதல்.
4) வெட்டிய உடன் பாவித்து முடித்தல்.

14) இலங்கையில் புதிய வணிக முயற்சியொன்றை ஆரம்பிப்பதற்குத் தேவையான தொழினுட்ப உதவி, சட்ட ஆலோசனைகளை, விற்பனை மேம்படுத்தல் முறைகள் மற்றும் வியாபாரத்தைப் பதிவு செய்தல் தொடர்பான அரச நிறுவனம்,
1) இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபை. 2) உள்ளூராட்சி சபை
3) கூட்டுறவு வங்கி 4) திறந்த பல்கலைக் கழகம்

15) உணவில் போசணைக் கூறுகள் அழியும் சந்தர்ப்பங்கள்,
1) நீண்ட நேரம் அதிக வெப்பத்துக்குட்படுத்தல்.
2) உணவை துண்டுகளாக்கிக் கழுவுதல்.
3) கூழ்போல தயாரித்து வடித்தல்.
4) மேற்கூறிய யாவும்.

16) இலங்கையின் பல்வேறு மாகாணங்களிலும் பல்வேறு உணவுகள் அதிகளவில் காணப்படு கின்றன. அவ் வகையில் மீன், இறால், நண்டு, அரிசி, சோளம் அதிக அளவில் காணப்படும் மாகாணம்,
1) வட மாகாணம் 2) மத்திய மாகாணம் 3) கிழக்கு மாகாணம் 4) தென் மாகாணம்

17) பயிர் செய்யும் நிலத்தின் எல்லைகளை தென்னோலை அல்லது பனையோலை மூலம் எல்லையிடுவதன் மூலம் எதிர்பார்க்கப்படுவது,
1) பூச்சிகள், பீடைகள் உள்வராது கடடுப்படுத்தப்படல்.
2) கள்வர்களிடம் இருந்து பாதுகாப்பு.
3) பறவைகளின் தாக்கத்தில் இருந்து பாதுகாக்க.
4) பயிர்களின் உறுதித் தன்மைக்கு.

18) ஒட்டு முறையொன்றின் புதிய அரும்புகள் உருவாகி ஒட்டு வெற்றியளித்துள்ளமையை எத்தனை வாரங்களில் அறியலாம்,
1) 2- 3 வாரங்கள் 2) 4 - 5 வாரங்கள் 3) 5 - 6வாரங்கள் 4) 6 -7 வாரங்கள்

19) காடுகளில் மூடுபடைகளை அகற்றுவதன் மூலம்,
1) உயிர் பல்வகைமை அழிவுறல். 2) சூழல் வெப்பநிலை அதிகரிக்க.
3) மண்ணரிப்பு ஏற்படடல். 4) மேற்கூறிய யாவும்.

20) தொடர்ச்சியாக பயிர் செய்வதனால் பயிர்களுக்கு சாதகமான மண்ணியல்புகள் அருகிபோகும் மண்ணை புனருத்தாரனம் செய்ய நாட்டப்படும் தாவரங்கள்,
1) பன்புற் தாவரங்கள் 2) கௌதமாலா புற்தாவரங்கள்
3) வெடடுப் புற்றாவரங்கள் 4) கிளிப்புற்றாவரங்கள்

(20x1 = 20 புள்ளிகள்)


kalvi.lk

## பகுதி II

**முதலாம் வினா கட்டாயமானது. ஏனைய வினாக்களில் விரும்பிய இரண்டு வினாக்களுக்கு விடை தருக.**
**மொத்தமாக மூன்று வினாக்களுக்கு விடை தருக.**

01) 1) நீர் உமது பாடசாலையில் செயன்முறைத் தொழிநுட்பத்திறன்கள் பாடத்தில் செயற்திட்டம் மூலம் தீர்வு கண்ட செயற்பாடுகள் இரண்டு தருக.

2) நீங்கள் எதிர்கொண்ட பிரச்சினைக்கு எவ்வாறு செயற்திட்டம் மூலம் தீர்வு கண்டீர்கள் என்பதனை சுருக்கமாகக் குறிப்பிடுக.

3) உங்கள் செயற்திட்டம் வெற்றியளிக்க உங்களுக்கு வழிகாட்டல்கள், உதவிகள் புரிந்தோர் யாவர்?

4) நீங்கள் செய்த செயற்றிட்டம் வெற்றியளித்த பின் உங்கள் மனதில் தோன்றிய எண்ணங்கள் யாவை?

(2+2+2+2+2 = 10 புள்ளிகள்)

02) 1) பொருளாதர ரீதியாக இலாபமீட்டக் கூடியவாறு வீட்டுத் தோட்டத்தை அபிவிருத்தி செய்யும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் மூன்று தருக.

2) வரையறுக்கப்பட்ட இடங்களுக்குப் பொருத்தமான பயிர்ச்செய்கை முறைகள் மூன்று தருக.

3) பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பொருத்தமான உபகரணங்கள்/ கருவிகள் இரண்டு தருக.

4) வீட்டுத் தோட்டச் செய்கையாளருக்கு உம்மால் வழங்கக் கூடிய ஆலோசனைகள் இரண்டு தருக.

(3+3+2+2 = 10 புள்ளிகள்)

03) 1) உணவுடன் தொடர்புடைய கைத்தொழில்கள் நிலைத்திருப்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் மூன்று தருக.

2) சுகாதாரப் பாதுகாப்பும் உயர் தரமும் கொண்ட உணவைத் தயாரிக்கையில் கவனிக்க வேண்டிய விடயங்கள் மூன்று தருக.

3) தனது பாடசாலைக் கல்வியினை முடித்துக்கொண்ட ராம் தான் வாழும் கிராமப் புறத்தில் அதிக அளவில் காணப்படும் பனம் பழத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளக் கூடிய யோகட் உற்பத்தி ஒன்றை சந்தைப்படுத்த முன் வந்தார். அவர் அதனை ஆரம்பிப்பதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறைகளைக் குறிப்பிடுக.

4) உணவுப் பொருட்களை பொதியிடலின் அவசியம் இரண்டு தருக.

(3+3+2+2= 10 புள்ளிகள்)

04) 1) பயிர்ச் செய்கைக்காக காடுகளை அழிப்பதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் எவை?

2) தாவரம் ஒன்றில் ஒட்டுதலை மேற்கொள்ளும் செயன்முறையை வரிப்படங்களின் (கைப் பரும்படி) உதவியுடன் குறிப்பிடுக.

3) சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் விவசாய நடவடிக்கைகள் எவை?

4) இலங்கையில் காணப்படும் பாரம்பரிய உள்ளூர்ப் பயிர்ப் பேதங்களின் சிறப்புகள் இரண்டு தருக.

(3+3+2+2 = 10 புள்ளிகள்)


kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி அධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457